# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102092

1. District மாவட்டம் : Chennai PS: காவல்நிலையம் DVAC, HQS. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 3 Date: நாள் 27.03.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act of 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e)

(ii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 465, 468, 471, 408, 409,

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 120(B).

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2004 Date to : நாள் வரை 2006

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை —

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.03.2018 Time நேரம் : 14.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.03.2018 Time நேரம் : 14.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Reliable Information

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 725 km South.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி O/o Joint Commissioner, HR & CE, Suchindram, Kanyakumari District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J. Christy

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Jayakanthan

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம் Indian

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Inspector of Police

(g) Address : முகவரி Special Investigation Cell, Vigilance & Anti Corruption, Alandur, Chennai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Attached separate sheet herewith.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Conducted Preliminary Enquiry.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Contents of the FIR is attached in separate sheets herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J. Christy Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................ பதவி ................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.03.2018 at 17.00 hrs

Name: பெயர் J. CHRISTY
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் .........

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண். 3/2018 வரிசை எண். 7-ன் குற்றஞ்சாட்டாப்பட்டவர்களின் விவரங்கள் பின்வருமாறு.

(AO-1) திரு.எம்.புகழேந்திரன், த/பெ மாரிமுத்து, துணை ஆணையர்,

(AO-2) திரு.எஸ்.இராமசுப்பு த/பெ சுடலையாண்டி செட்டியார், இளநிலை உதவியாளர்,

(AO-3) திரு.வேலப்பப்பிள்ளை, த/பெ முன்னப்பபிள்ளை, கண்காணிப்பாளர்,

(AO-4) திரு.சோனாச்சலம்பிள்ளை, த/பெ பானுப்பிள்ளை, கண்காணிப்பாளர்,

(AO-5) திரு.நா.குற்றாலம், த/பெ நாகலிங்கம், இளநிலை உதவியாளர்,

(AO-6) திரு.கிருஷ்ணதாஸ், த/பெ கோதப்பபிள்ளை, மேற்பார்வையாளர் (Dismissed) ,

(AO-7) திரு. த. இராமசந்திரன், த/பெ தர்மகன், தி.இ.நி.உதவியாளர்,

(AO-8) திரு எஸ். ரமேஷ்குமார், த/பெ எம்.கே. சுப்பிரமணிபிள்ளை, கணக்கர்,

(AO-9) திரு.வி.அய்யப்பன், த/பெ சி. வேலாயுதம் செட்டியார், மேஸ்திரி,

(AO-10) திரு. ஏ.ஆறுமுக நயினார், த/பெ எ. ஐயம்பிள்ளை, இளநிலை உதவியாளர்,

(AO-11) திரு.பி.தங்கசுவாமி, த/பெ ப. பண்டாரம், இளநிலை நிர்வாகி,

(AO-12) திரு.எஸ். இராஜேந்திரன், த/பெ எ. சதாசிவம் பிள்ளை, இளநிலை உதவியாளர் (ஓய்வு),

(AO-13) திரு.சி.கார்த்திகேயன், த/பெ சிதம்பரம், மேஸ்திரி (ஓய்வு),

(AO-14) திரு. A.மோகனகுமார், த/பெ அப்புகுட்டன், இளநிலை நிர்வாகி,

(AO-15) திரு.எஸ்.சிரிமூல வெங்கடேசன், த/பெ சீனிவாசன் போத்தி, கண்காணிப்பாளர்,

(AO-16) திரு.டி.கே.இராஜசேகரன், த/பெ கிருஷ்ணன்தம்பி, கண்காணிப்பாளர், (ஓய்வு),

27/3/18

**J. CHRISTY**
**INSPECTOR OF POLICE**
**Special Investigation Cell**
**Vigilance & Anti Corruption,**
**Chennai 600 016.**

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண். 3/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள - கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம் திருக்கோவில் அலுவலக நிருவாகத்தின் கீழ் வரும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் குற்ற அலுவலர்கள் **(AO-1** முதல் **AO-16)** வரை உள்ளவர்கள் 2004 முதல் 2006ஆம் வருடம் (பசலி வருடம்1415-1417), பணம் பெற்றவரின் ஒப்பமின்றியும், போலியான கையொப்பமிட்டு, செலவுச்சீட்டுக்களை இணைத்தும் - படித்தரம், திருவிழா என தலைப்பிட்டு ஆலய நிதி ரூபாய். 2,96,017/- கையாடல் செய்துள்ளதாக உறுதிப்படுத்தபடாத கூற்றின் மீது ஒரு முதல் கட்ட விசாரணை நடைப்பெற்று அந்த விசாரணையின் விபரம் பின்வருமாறு

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் திருக்கோவிலில் 2004 மற்றும் 2006ம் வருடம், அரசாணை நிலை எண் 64 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை நாள். 17.02.2006ன் படி அரசு மானியம் ரூ.19.70 லட்சத்தை 1 கோடியாக உயர்வு செய்யும் போது இணைக்கப்படாத தேவசங்களின் பூஜை முறைகளை மேம்படுத்த 2005 முதல் 2006 வரையுள்ள நிதியாண்டிற்கு ரூ.12 லட்சம் செலவிட ஆணையரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்போ அல்லது பின்போ சங்கேதம் திருக்கோவில்களுக்கு எந்தவிதமான பணபரிவர்தனையும் நடைபெறவில்லை என விசாரணையில் தெரியவருகிறது. ஆனால் சங்கேதம் திருக்கோவில்களில் அந்தந்த கோவில்களின் வருமானத்தைக்கொண்டு நிருவகிக்கப்படுகிறது. திருவிழாவே நடைபெறாமல் திருவிழா நடந்ததாகவும், அதற்கு கடைகளில் பொருட்கள் வாங்கியதாக, கடைகளில் பணம் பெற்றவரின், கையொப்பம் பெறாமல், போலியான கடைபில்களை **(AO-1)** அரசு ஊழியரான திரு.புகழேந்திரன், துணை ஆணையர் தன் கீழ் பணிபுரியும் பொது ஊழியர்கள் அல்லாத அலுவலர்கள் 1. திரு. சிரிமூலவேங்கடேசன் பூதபாண்டி தொகுதியல் கண்காணிப்பாளர் 2. திரு.இராஜசேகர், குழித்துறை தேவசம் தொகுதி கண்காணிப்பாளர் மற்றும் சுசீந்திரம் தலைமை அலுவலக ஊழியர்கள் 3. திரு.இராமசுப்பு-இளநிலை உதவியாளர், F5 பிரிவு எழுத்தர், 4. திரு.வேலப்பப்பிள்ளை, கண்காணிப்பாளர், 5. திரு.சோனாசலம் பிள்ளை, கண்காணிப்பாளர், 6. திரு.குற்றாலம்-இளநிலை உதவியாளர் F2 பிரிவு எழுத்தர் ஆகியோருக்கு உத்தரவிட்டும் போலியான கடை பில்களை தயார்செய்து, கோவில் நிர்வாகிகளை சுசீந்திரம் - தலைமை அலுவலகத்திற்கு வரவழைத்து வரவழைக்கப்பட்ட நாளிலேயே, குறிப்பு எழுதி, கண்காணிப்பாளரால் பரிந்துரை செய்ததாக, கீழ்கண்ட திருக்கோவில் நிர்வாகிகள் கையெழுத்து போட்டுள்ளனர்.

(1). திரு.கிருஷ்ணதாஸ் ஸ்ரீகாரியம் திருவிடைக்கோடு உபதொகுதி திருக்கோயில்களின் நிர்வாகப் பொறுப்பில் ரூ.71,853/- ம்,

(2). திரு.த.இராமச்சந்திரன் பத்மநாதபுரம் தொகுதி ஸ்ரீகாரியம் ரூ.61.228/- ம்,

(3). திரு.எஸ். ரமேஷ்குமார் - அருள்மிகு ஸ்ரீ பூதநாதசுவாமி திருக்கோயில் ஸ்ரீகாரியம் ரூ.28.570/- ம்,

(4). திரு.அய்யப்பன் நாகர்கோவில் தொகுதி ஸ்ரீகாரியம் ரூ.4,392/-ம்,

(5). திரு.A.ஆறுமுகநயினார் பிள்ளை பூதபாண்டி தொகுதி ஸ்ரீகாரியம் ரூ.6,552/-ம்,

(6). திரு.பி.தங்கசாமி வடிவீஸ்வரம் திருக்கோவில் ஸ்ரீகாரியம் ரூ.1,416/-ம்,

(7). திரு.எஸ்.இராஜேந்திரன் குழித்துரை உபதொகுதியில் பணியின்போது ரூ. 9,840/-ம்

(8). திரு.சி.கார்த்திகேயன், நாகர்கோவில் அகஸ்திவரம் தொகுதியில் பணியில் இருந்தபோது ரூ.8,736/-ம்

(9). திரு.A.மோகன்குமார் மணலிக்கரை உபதொகுதி ஸ்ரீபாதம் பூதத்தான் கோயில் தொகை ரூ.36,975/-ம்

(10). திரு.ஏ. முருகேசபிள்ளை, மின்பணியாளர் (பணிக்காலத்தில் மரணமுற்றவர்) ரூ.47,000/-

(11). திரு.ஆர்.சுந்தரம் அய்யர் ரூ. 8,079/-

(12). திரு. பி .இராதாகிருஷ்ணன் சிறப்பு காவலர் ரூ. 7,344/-

(13). திரு.எச்.நடராஜன் ரூ. 4,392/-

மேலும் 1. திரு.ஏ.முருகேசபிள்ளை 2. திரு.ஆர்.சுந்தரம் அய்யர், 3. திரு. பி. இராதாகிருஷ்ணன் சிறப்புகாவலர், 4.திரு.எச்.நடராஜன், ஆகியோர் மரணமடைந்துவிட்டனர், மரணமடைந்தவர்களை தவிர மற்றவர்களை முதல்நிலை விசாரணை செய்ததில் துணை ஆணையர் திரு.புகழேந்திரன் அவர்கள், இந்த ஆலய நிதியை, **(W-9)** திரு.குற்றாலம், காசாளர், F2 எழுத்தரைக்கொண்டு, ஸ்ரீகாரியங்களுக்கு காசோலை எழுதவைத்து, அவராலேயே வங்கியில் காசோலைகள் மாற்றப்பட்டு, வங்கியிலிருந்து பெறப்பட்ட அந்த பணத்தை, திரு.புகழேந்திரன் துணை ஆணையர் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளார் என்று, வங்கியில் மாற்றப்பட்ட காசோலையின் நகல்களை பார்வையிட்டதிலும், திருக்கோவில் அலுவலர்களை விசாரணை செய்ததிலிருந்தும் தெரியவருகிறது. எனவே **(AO-1)** திரு.புகழேந்திரன் அவர்கள் அரசு ஊழியர் என்பதாலும், இவர், துணை ஆணையர் பதவியை துஷ்பிரயோகம் செய்தும், தன் அதிகாரத்தின் கீழ்வரும் (பொது ஊழியர் அல்லாதவர்களை) கோவில் ஊழியர்களை தவறாகப்பயன்படுத்தியும், ஆலய நிதியை கையாடல் செய்யவேண்டும் என திட்டமிட்டு, கையாடல் செய்தது விசாரணையில் தெரியவருகிறது. கன்னியாகுமாரி மாவட்டம், சுசீந்திரத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் பசலி 1415-1417 (2004 -2006) காலத்தில் போலியான ஆவணங்கள் தயார் செய்து, சுசீந்திரம் - சங்கேதம் மற்றும் ஸ்ரீபாதம் - ஆலயங்களின் நிதி ரூபாய் 2,96,017/- ஐ கையாடல் செய்துள்ளது தெரியவருகிறது. போலியான ஆவணங்களை, அவை செலவினங்கள் செய்யாமலேயே செய்ததாக உண்மைக்கு புறம்பாக, போலியாக தயாரித்திருப்பதும் தெரியவருகிறது. மேலும் மேற்சொன்ன போலியான செலவினங்களுக்கு காசோலையாக பட்டுவாடா செய்வது போல் காசோலைகள் வெவ்வேறு நபர்களின் பெயர்களில் தயார் செய்யப்பட்டு அவர்களே நேரடியாக வங்கியில் பணம் பெறுவது போன்று, காசோலைகளின் பின் பக்கத்தில் கையொப்பம் பெறப்பட்டு பணம் கையாடல்

செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. **(AO-1)** திரு.புகழேந்திரன் துணை ஆணையர் தன் சுயலாபத்திற்காக, தனக்கு கீழ் பணிபுரியும் திருக்கோவில் அலுவலர்களை, தன் பதவியை தவறாக பயன்படுத்தி, ஆலய நிதியை ரூ.2,96,017/- கையாடல் செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரிய வருகிறது. முதற்கட்ட விசாரணையில், குற்ற அலுவலர் திரு.எம்.புகழேந்திரன் (AO-1), முன்னாள் துணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் 2004 மற்றும் 2006ம் ஆண்டுகள் (பசலி வருடம் 1415-1417) ல் சங்கேதம் திருக்கோயில்கள் மற்றும் ஸ்ரீபாதம் திருக்கோயில்களில் போலியாக செலவுச் சீட்டுக்களை இணைத்து படித்தரம், திருவிழா என்று தலைப்பிட்டு போலியான கையொப்பமிட்டு ஆலய நிதி ரூ.2.96.017/-யை தனக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களை பயன்படுத்தி கையாடல் செய்துள்ளதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவருகிறது. எதிரிகள் 1 முதல் 16 வரையிலானவர்கள் ஆலய நிதி கையாடல் புரியும் நோக்கத்தோடு கூட்டுச்சதி செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் 2004-2006 ம் ஆண்டு (பசலி 1415-1417) நேர்மையற்ற முறையில் சங்கேதம் திருக்கோயில்கள் மற்றும் ஸ்ரீபாதம் திருக்கோயில்களில் போலியாக செலவுச்சீட்டுகளை இணைத்து படித்தரம், திருவிழா என்று தலைப்பிட்டு போலியான கையொப்பம் இட்டு போலி ஆவணங்களை தயார்செய்து அந்த போலி ஆவணங்களை ஏமாற்றும் நோக்கத்துடன், அந்த போலியான ஆவணங்களை நேர்மையற்ற முறையில் உண்மையான ஆவணங்களை போல உபயோகப்படுத்தி, நேர்மையற்ற முறையில் ஆலய நிதி ரூபாய் 2,96,017/- யை கையாடல் செய்தும் மேலும் முதல் எதிரி மற்ற எதிரிகளுடன் கூட்டு சதி செய்து பொது ஊழியர் என்ற முறையில் துணை ஆணையர் பதவியை துஷ்பிரயோகம் செய்தும், மேற்படி ஆலய நிதி 2,96,017/-யை கையாடல் செய்து, குற்றவியல் தவரான நடத்தை (Criminal Misconduct) செய்திருப்பது இந்த முதல்கட்ட விசாரணை அறிக்கையில் இருந்து தெரியவருவதால் எதிரிகள் **(AO-1)** திரு.எம்.புகழேந்திரன் துணை ஆணையர் (AO-2) திரு.எஸ்.இராமசுப்பு இளநிலை உதவியாளர், (AO-3) திரு.வேலப்பப்பிள்ளை கண்காணிப்பாளர், (AO-4) திரு.சோனாச்சலம்பிள்ளை கண்காணிப்பாளர், (AO-5) திரு.நா.குற்றாலம் இளநிலை உதவியாளர், (AO-6) திரு.கிருஷ்ணதாஸ் (Dismissed) (AO-7) திரு. த. இராமசந்திரன், தி.இ.நி.உதவியாளர், (AO-8) திரு எஸ். ரமேஷ்குமார், கணக்கர் (AO-9). திரு.வி.அய்யப்பன் மேஸ்திரி, (AO-10). திரு. ஏ.ஆறுமுக நயினார் இளநிலை உதவியாளர், (AO-11) திரு.பி.தங்கசுவாமி, இளநிலை நிர்வாகி, (AO-12).திரு.எஸ். இராஜேந்திரன் இளநிலை உதவியாளர் (ஓய்வு), (AO-13). திரு.சி.கார்த்திகேயன், மேஸ்திரி (ஓய்வு), (AO-14).திரு. A.மோகனகுமார், இளநிலை நிர்வாகி, (AO-15), திரு.எஸ்.சிரிமூல வெங்கடேசன், கண்காணிப்பாளர் (AO-16), திரு.டி.கே.இராஜசேகரன் கண்காணிப்பாளர்

ஆகியோர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 465, 468, 471, 408, 409, 120 (B) தடுப்புச் சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(c) of Prevention of Corruption Act, 1988 ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 27.03.2018 14.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தலைமையகம் குற்ற எண். 3/2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கையினை கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகர்கோவில் அவர்களுக்கும் பிற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி விசாரணை நகலை நான் எடுத்துக்கொண்டேன்.

27/3/18

J. CHRISTY
INSPECTOR OF POLICE
Special Investigation Cell
Vigilance & Anti Corruption,
Chennai 600 016.